பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை-6, அவர்களின் செயல்முறை ஆணை**

பிறப்பிப்பவர் : மரு.அ. சண்முகக்கனி, எம்பிபிஎஸ்., டிசிஎச்.,

ந.க.எண்.20739/நிபி8/1/2023 நாள்: 18.07.2023

பொருள்: நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.அ.செல்வகுமார், இளநிலை உதவியாளர், அரசு மருத்துவக் கல்லூரி தூத்துக்குடி (ம/பெ (லேட்)திருமதி.மு.சித்ராதேவி, தட்டச்சர், இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம், தூத்துக்குடி) – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2) அரசு கடித எண்.8014/ஏடி2/2021-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 20.05.2021.
3) இவ்வியக்க கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.51080/நிபி8/1/2021, நாள் 30.09.2021.
4) இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.59036/நி2/2/2021, நாள் 05.10.2021.
5) தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் அலுவலக கடித ந.க.எண்.8696/நி4/2021, நாள் 12.04.2023 மற்றும் 16.05.2023.
6) மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள்.

------

**ஆணை :**

தூத்துக்குடி மாவட்ட இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து, பணியிலிருக்கும் போதே 18.09.2010 அன்று இயற்கையெய்திய திருமதி.மு.சித்ராதேவி என்பவர் 03.08.2009 அன்று பணிவரன்முறை செய்யப்பட்டார். அவரின் பிறந்த தேதி 17.05.1980, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 31.05.2040 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரரும் கணவராகிய திரு.அ.செல்வகுமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)-ன்படி, தூத்துக்குடி மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் தட்டச்சராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும் போதே 18.09.2010 அன்று இயற்கையெய்திய திருமதி மு.சித்ராதேவி என்பவரின் வாரிசுதாரரும் கணவருமான திரு.அ. செல்வகுமார் (பிறந்த தேதி 20.05.1975) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் ஆக ரூ.19500-62000/- நிலை 8 (Level-8) என்ற சம்பள முறையில் பார்வை-3இல் காணும் ஆணைப்படி பணிநியமனம் செய்யப்பட்டு, பார்வை-4இல் காணும் பணியமர்த்தல் ஆணைப்படி, தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் 18.10.2021 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் இணைந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.அ.செல்வகுமார் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-1இல் காணும் அரசாணையின்படி அவர் பணியில் இணைந்த நாளான 18.10.2021 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

அ. சண்முகக்கனி,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர்

பெறுநர்
திரு.அ. செல்வகுமார்,
இளநிலை உதவியாளர்,
தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி,
தூத்தூக்குடி.

– தூத்தூக்குடி, அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மூலமாக.

நகல்
1. மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை-10.
2. அரசு மருத்துவக் கல்லூரி, தூத்துக்குடி.
3. நிர்வாகப்பிரிவு – 2.
4. இருப்புக்கோப்பு / உபரி -1.

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

ந.க. எண்: 8696/இ4/21 நாள் 25/07/23

இணை இயக்குநர் (நிர்வாகம்)

இளநிலை நிர்வாக அலுவலர்
அரசு தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி
தூத்துக்குடி

5